கொழும்புத் தமிழ்ச் சங்க நிறுவுனர் தினம் - 2012

# சங்கச் சான்றோர் விருது பெற்ற செம்மல்கள்








**தொகுப்பாசிரியர்**

சொல்லின் செல்வர் - தமிழ்த்தென்றல்

**தம்பு சிவசுப்பிரமணியம்**

~ தம்பு சிவா ~

துணைச் செயலாளர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



வெளியீடு : கற்பகம் இலக்கியச் சோலை, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கொடகே இலக்கிய விருது - 2011**
**நாமக்கல் கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை**
**முதன்மை இலக்கிய விருது - 2011**
**இரண்டு விருதுகள் பெற்ற சிறந்த நாவல்**



**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின்**
**உச்ச வளர்ச்சிக்கு உறுதுணையாக**
**நின்றுழைத்த சங்கச் சான்றோன்**
**அமரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி ஐயா**
**அவர்களுக்கு இச்சிறுநூல்**

## சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

சமூக இயங்கியலின் நீட்சியாகப் பண்பாட்டு நிறுவனங்கள் முகிழ்த்தெழுகின்றன. தமிழ்பேசும் எழுகுழாத்தினரது சிந்தனை வழியே கால்கோள் கொண்டது கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

பல்வேறு கருத்தியல் கொண்டவர்களின் தளத்தில் அது ஆக்கம் பெற்றுள்ளமையால் அதற்குரிய பலமும் உண்டு. அதேவேளை இடைவெளிகளும் உண்டு. அந்நிலையில் திருக்குறளை மையப்படுத்திய மீநிலைப்பண்பாட்டு (Super Culture) இயல்புகளுடன் அதன் இலக்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச்சங்கத்திலும் பொதுவாழ்விலும் சமூகவகிபாகத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பணிகளைச் (Role Based Tasks) செவ்விதாக நிறைவேற்றிய ஆளுமையினர் சங்கச் சான்றோராகக் கௌரவிக்கப்படுகின்றனர்.

கௌரவிக்கப்படும் ஒவ்வொருவரும் தத்தமது தளங்களில் வினைத் திறனுடன் இயங்கி வருபவர்கள். புறவயமான (Objective) அளவீடுகளின் அடிப்படையிலே தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சுயநோக்கம் எதுவுமற்ற அந்தத் தெரிவுமுறை சங்கச் சான்றோர் விருதை மேலும் கௌரவப்படுத்துகின்றது.

**இலக்கிய இமயம்**
**பேராசிரியர் சபா.ஜெயராசா**
**முன்னாள் சங்கத்தலைவர்**



## சங்கச் சான்றோர் விருது பெறும்

### கலாநிதி செல்வி திருச்சந்திரன்

வடபுலத்துக் கல்விமான்களில் சிறப்புப் பெற்று விளங்கிய பெரியார் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் புத்திரியாகிய இவர், தந்தையார் அதிபராக இருந்த கொக்குவில் இந்துக் கல்லூரியில் தமது கல்வியை மேற்கொண்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்று கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பட்டப் பின்படிப்புக் கற்கைநெறியை கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். சமூக ஆய்வு நிறுவகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினைப் பெற்ற இவர் கலாநிதிப் பட்டத்தினை அம்ஸ்டாமில் உள்ள விறிகே (Vrige) பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

தமிழ்மொழியிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமையாளராகிய செல்வி அவர்கள் தமது உரையாற்றல் மூலமும், செயலாற்றல் மூலமும் சமுதாய விடிவுக்கான பங்களிப்பை முன்னிறுத்திச் செயற்பட்டு வருகின்றார். குறிப்பாக பெண்களுக்கான பால்நிலை சமத்துவத்தை நோக்கிய தமது பாதையில் இம்மியளவும் வழுவாது அதற்கான பல்வகைச் செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திச் செயற்பட்டு வருகின்றார். சமூக, அரசியல், கலாசார தாபனங்கள் போன்ற அமைப்புகளினால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் எவை என்பதை ஆய்வுசெய்து, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, கொள்கைகளை வகுத்து செயற்படும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்கின்றார்.

பால்நிலைச் சமத்துவத்தை நமது நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் ஏற்படுத்தப் போராடுதல், அதற்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ளல், கொள்கை மாற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொண்டு, பெண்களின் கல்வி, அறிவியல், சமூக, பொருளாதார,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார விழுமியங்களையெல்லாம் உள்ளடக்கிய வகையில் ஆணுக்குப் பெண் எந்தவகையிலும் தாழ்ந்தவளல்ல என்பதை வலியுறுத்தி வந்துள்ளார். பெண்களின் முன்னேற்றம் அவர்களின் கல்விச் செயற்பாட்டின் மூலம் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற நோக்கில் கொழும்பிலே "பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்" என்ற அமைப்பை உருவாக்கி அதன் பணிப்பாளராக இன்றுவரை உற்சாகமாகச் செயற்பட்டுவருகின்றார். செயற்திறன் மிக்கவர் என்ற வகையில் அவர் பணிகள் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அதிதி விரிவுரையாளராகவும் அவ்வப்போது பணியாற்றிவந்த செல்வி திருச்சந்திரன், உலகின் பல நாடுகளிலும் இடம்பெற்ற சமூகவியல், மானிடவியல் தொடர்பான கருத்தரங்குகளில் பங்குபற்றிக் காத்திரமான தமது கருத்துக்களை துணிவுடன் முன்வைத்துப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

உலகளாவிய ரீதியில் "மனித உரிமை"ப் பிரகடனத்தின்படி பெண்கள் அனைவரினதும் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் அடக்குமுறை, வன்முறை என்பவற்றுக்கெல்லாம் ஆளாகாமல் பால்நிலைச் சமத்துவத்துடன் வாழவழிகாண வேண்டும் என்ற நிலையில் பலதிட்டங்களை வகுத்துச் செயற்படுத்தியதோடு அவற்றின் வெற்றிக்காக உழைத்தவர் என்ற வகையில் செல்வி திருச்சந்திரன் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

பெண்கள் அறிவுத்திறனும், சிந்தனைத் தெளிவும், இலக்கிய ஆர்வமும், ஆய்வு முயற்சியும் கொண்டவர்களாக மிளிரவேண்டுமென்ற ஆர்வமிகுதியால் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக கல்வியும் ஆய்வும் ஆகிய அறிவுசார் விடயங்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் அறிவுபெற்று வாழவேண்டும் என்பதில் அக்கறைகாட்டி அதற்காக உழைத்து வருகின்றார். சமத்துவம் நோக்கும் இச்சமுதாயத்தில் பெண் கல்விதான் முதலிடம் வகிக்க



வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு அந்த நோக்கத்திற்காகச் செயலாற்றி வருகின்றார்.

எழுத்துத் துறையில் வல்லமை பெற்றுள்ள இவர் பெண்ணிலைவாதம், இலக்கியம், அரசியல், பண்பாடு, விமர்சனம் எனப் பல்வேறு துறைசார்ந்த விடயங்களிலும் நூல்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிக்கொணர்ந்துள்ளார். **"தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு"** என்னும் இவரது நூல், குமரன் புத்தக இல்ல வெளியீடாக வெளிவந்துள்ளது. வரலாற்றையும் மானிடவியலையும் இணைத்து மாக்சிய நெறிமுறையில் பெண்ணிலை நோக்கில் செய்யப்பட்ட இவ்வாய்வு நூல் முதல் நூலாகவே அமைந்துள்ளது. ஆங்கில மொழியில் பத்து நூல்கள் வரை எழுதியுமுள்ளார். பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் என்ற இவர் வழிநடத்தும் அமைப்பு "நிவேதினி" என்ற ஆய்வுச் சஞ்சிகையை வெளியீட்டு வருகின்றது. அதில் பால்நிலை கற்கைநெறி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். "பிரவாகினி" என்ற செய்திமடலும் இந்நிறுவனத்தின் வெளியீடாக வெளிவருகின்றது.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் "மதப் பண்பாட்டுக் கோலங்கள்", "பால் நிலை நோக்கு", "பெண்களின் வாய்மொழி இலக்கியம்" (தாலாட்டு, ஒப்பாரி), "பெண்ணிலை வாதம்", "தமிழ் வரலாற்றுப்படிமங்கள்", "வாழ்வியல் சமதர்மக் கோட்பாடு", பெண்ணடிமை - பெண் உரிமை போன்ற விடயதானங்களில் புதிய கோணங்களில் சிந்தித்து நூற்றுக்கணக்கான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை வெளிக்கொண்டு வந்ததன் மூலம் பெண் சமுதாயத்தின் விடுதலை நோக்கிய செயற்பாட்டுக்கு பேருதவியாக இருந்துள்ளார்.

"தெற்காசிய பெண்ணிய ஆய்வு முன்னணி" என்ற அமைப்பில் பணியாற்றும் இவர், இலங்கை சமூக விஞ்ஞான சங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகசபை உறுப்பினராகவும், இச்சங்கத்தின் தமிழ் வெளியீடான "பிரவாத" வெளியீட்டின் ஆசிரியகுழு உறுப்பினராகவும், மேலும் பல்வேறு அமைப்புகளிலும், செயற்பாடுகளிலும் முக்கிய பொறுப்புக்களை ஆற்றி வந்துள்ளார்.

கொழும்புத் தமிழ் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக 1978 இல் இணைந்து கொண்ட இவர் அதன் முன்னேற்றகரமான வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கி வந்துள்ளார். சங்கத்தின் துணைத் தலைவராகவும், ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இருந்து கல்வி, இலக்கியம், நூலகம் ஆகியவற்றின் செயற்பாட்டுக்கு தமது புலமைவழி நின்று ஒத்துழைப்பு நல்கியுள்ளார். இத்தகைய சாதனையாளருக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது நிறுவனர் தின விழாவிலே "சங்கச் சான்றோர்" விருது வழங்கிக் கௌரவிப்பது பெருமைக்குரிய செயலாகும்.

– தம்பு சிவசுப்பிரமணியம் –

'எந்தச் சமுதாய ஒழுங்கும்,அதற்குள் விருத்தி பெற இடமுள்ள சகல உற்பத்திச் சக்திகளும் விருத்தி பெறும் வரை இல்லா தொழிவதில்லை. புதிய உற்பத்தி உறவுகளின் இருப்புக்கு அவசியமான பொருள் சார்ந்த நிலைமைகள் பழைய சமுதாயத்தின் கருவறைக்குள்ளேயே முதிரும் வரை, புதிய உற்பத்தி உறவுகள் தோன்றுவதில்லை. எனவே மனித இனம் தன்னாற் செய்யக்கூடிய பணிகளையே தனக்கு விதிக்கிறது. ஏனெனில், இவ்விடயத்தைக் கூர்ந்து நோக்குவோமாயின், எப்போதும் ஒரு பணியை நிறைவேற்றுவதற்கு அவசியமான நிலைமைகள் ஏற்கனவே உள்ள போது அல்லது உருவாகி வருகின்ற போதே அப்பணியும் தோற்றம் பெறுகிறது"

- *கார்ல் மார்க்ஸ்* -



# சங்கச் சான்றோர் விருது பெறும்

**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்**

தமிழ்க் கல்விச் சூழலில் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம் அவர்கள் முக்கியமானவர்களில் ஒருவராக முகிழ்ந்து நிற்கின்றார். கல்வியியல் துறையில் பேராசானாக விளங்கி இத்துறைசார் விருத்தியில் பன்முகப் பங்களிப்பை வழங்கி வருகின்றார். கற்றறி புலமையாளராகவும், ஆய்வாளராகவும் சமூகப் பரிமாணம் பெற்று ஆளுமை மிக்க ஒருவராக எழுச்சிபெற்றுத் திகழ்கின்றார். கல்வியியல் துறையில் இவரது எழுத்துக்கள், ஆய்வுகள், நூல்கள் என்பன வளவிருத்திக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன.

சோமசுந்தரம் தம்பதியினரின் மகனாக 23-12-1944 இல் பதுளையில் பிறந்த இவர் தமது ஆரம்ப கல்வியை பதுளை ஊவாக் கல்லூரியில் கற்றார். பின்னர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று கல்வியியல் சிறப்புப் பட்டத்தை 1967 இல் பெற்றுக் கொண்டார். கல்வியியல் போதனாசிரியராக 1968 இல் இணைந்து கொண்டார்.

1971 ஆம் ஆண்டு வெலிகம அரபா மகாவித்தியாலத்தில் ஆசியராகக் கடமையேற்றார். தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகக் கடமையாற்றிய மூன்று ஆண்டுகளும், பயிற்சி ஆசிரியர்களின் ஆளுமை விருத்திக்கு உதவும் வகையில் தமது போதனைகளை மேற்கொண்டார். 1975 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் அங்கு தொடர்ந்து பணியாற்றிய காலத்தில் ஹிரோசிமாப் பல்கலைக்கழகத்தில் (1977-1980) முதுகலைமாணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டத்தையும் பெற்றார். தமது அயராத உழைப்பின் பேறாக கல்வியியல் துறையில் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான கல்வித்துறைத் தலைவராகவும் மற்றும் கல்வியியல் பீடாதிபதியாகவும் இருந்து பெரும் பணியாற்றினார். 2010 இல் ஓய்வு பெற்ற இவர் 2011 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கல்வி முகாமைத்துவத்துறை நிபுணத்துவ ஆலோசகராகக் கடமையேற்றார்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்துக்குள் மட்டும் இயங்காது. சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிறுவனங்களிலும் இயல்பாகக் கலந்து கொள்ளக் கூடிய ஆர்வமும் துடிப்பும் கொண்டவர். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இருதடவைகள் தலைவராக இருந்து சங்கத்துடன் தொடர்புடைய பணிகளுக்கு உந்துசக்தியாக இருந்து செயற்பட்டு வந்துள்ளார். மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும், தேசிய கல்வி ஆணைக்குழு உறுப்பினராகவும், தேசிய நூலகச் சபை உறுப்பினராகவும் இருந்து அவற்றின் வளர்ச்சிப் பணிகளில் தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

தமிழியலின் நவீன பரிமாணங்களை வளர்ப்பதில் அக்கறை கொண்ட இவர், உலகின் நவீன அறிகைச் சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் கலைச்சொல் ஆக்கங்களையும், தமிழ் தழுவிய உரையாடல் ஆளுமையையும் உருவாக்குவதில் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

பல்கலைக்கழகப் பணிகளை சமூக நோக்கிலும், கல்வி நோக்கிலும் விரிவாக்கிப் புதிய பாடநெறிகளையும், கற்கை நெறிகளையும் உருவாக்குவதற்கு உழைத்துவந்த இவர், இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் பிறநாட்டுப்



பல்கலைக்கழகங்களுக்கும் அவற்றை அறிமுகப்படுத்தி தமது கல்விப் பணியை சிறப்புடன் ஆற்றியுள்ளார். ஐக்கிய அமெரிக்க ஓபோன் பல்கலைக்கழகம், ஜப்பான் ஹிரோசிமாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வருகை தரு பேராசிரியராகவும் சென்று பணியாற்றியுள்ளார்.

எழுத்துத் துறையில் தடம்பதித்த இவர், "சமகாலக்கல்வி முறைகளின் சில பரிமாணங்கள்", "கல்வியில் புதிய தடங்கல்", "ஒப்பியல் கல்வி", "கல்வியின் நவீன செல்நெறிகள்", "சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு" போன்ற கல்வியியல் பற்றிய முப்பது நூல்களை தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் தந்துள்ளார். மேலும் 800 க்கும் மேற்பட்ட கல்வியியல் மற்றும் இலக்கியம் சார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

கல்விப்புலத்தில் புகழ்பெற்ற இவர் ஜப்பான், தென்கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற கல்வியியல் மாநாடுகளில் பங்குபற்றி இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார். கனடா உதயன் பத்திரிகை இவருக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இத்தகைய ஆற்றல் படைத்த பெருமகன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பெரும் பணிக்காகச் "சங்கச் சான்றோர் விருது" வழங்கிக் கௌரவிப்பது பெருமைக்குரியதே!

**– தம்பு சிவசுப்பிரமணியம் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கச் சான்றோர் விருது பெறும்

### செல்வி சற்சொரூபவதி நாதன்

செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள் ஒலிபரப்புத் துறையில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சேவையாற்றி முத்திரை பதித்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்து தமிழ்மொழி. கலை இலக்கியம் அதன் வளர்ச்சி நோக்கிய பங்களிப்பை வழங்கியதன் மூலம் சகலருடைய பாராட்டுக்களையும் பெற்றவர். இதன் காரணமாக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் முதலாவது பெண் துணைத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மூன்று முறை துணைத்தலைவர் பதவி வகித்த இவர், தற்பொழுதும் கூடுதலான ஆதரவைப் பெற்று துணைத்தலைவர் பதவியை வகித்து வருகின்றார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் தமது மேற்படிப்புக்காகத் தமிழகம் சென்றார். மற்றாஸ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு விஞ்ஞானமாணி (B.Sc) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இலங்கை வந்த இவர் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றிய பின், ஒலிபரப்புத் துறையில் கால் பதித்தார். சிறப்பான குரல்வளம், நேர்த்தியான தமிழ் உச்சரிப்பு, எல்லோரையும் ஈர்க்கும் சொல்லாடல் என்பன அவரின் ஒலிபரப்பு ஆளுமைக்குக் கட்டியம் கூறுபனவாக இருந்துள்ளன. நாற்பது ஆண்டுக்கால ஒலிபரப்பு வரலாற்றில் அறிவிப்பாளராக, முதலாந்தர செய்தி வாசிப்பவராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, கலை இலக்கிய சங்கமங்களை நெறியாள்கை செய்து வழங்கியவராக பல உச்சங்களைக் கண்டவர். இதன் காரணமாக உலகளாவிய நேயர்களின் விருப்புக்குரியவராக மதிக்கப்பட்டார்.



ஆங்கில ஒலிபரப்புச் சேவை நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராக, செய்தி ஆசிரியராக, கல்வி ஒலிபரப்பில் பொறுப்பதிகாரியாக பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார்.

இவரது பல்துறை ஆற்றலால் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டவர். 1958 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜவகர்லால் நேருவிருது பெற்ற இவர் இலக்கிய, கலை, கலாசார மற்றும் இளைஞர் மகளிருக்கான பயன்தரும் நிகழ்ச்சிகளை வழங்கி சிறந்த செய்தி வாசிப்பாளராக ஒலிபரப்புத்துறையில் ஆற்றிய சேவைக்காக 1992 இல் உண்டா விருதுக்கும் உரியவரானார். 1993 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சு "தொடர்பியல் வித்தகர்" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. 1995 இல் ஜனரஞ்சக செய்தி வாசிப்பாளராக ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டார். மேலும் சிறந்த பெண்மணி விருது, வானொலி பவளவிழா விருது, சாதனையாளர் விருது ஆகியவற்றுடன் யாழ் இந்து மகளிர் பழைய மாணவர்சங்கம் "சகல கலா வித்தகி" என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

பண்டிதர் க.பொ.இரத்தனம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் திருக்குறள் மாநாடுகளை நடத்திய வேளைகளில் சிறப்புச் சொற்பொழிவாளராகப் பங்குபற்றி தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். இவரின் பேச்சின் வன்மையைக் கேட்ட தமிழறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள், அவர் சற்சொரூபவதியல்ல சொற்சொரூபவதி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிகளில் கூடிய ஈடுபாடு கொண்டு உழைத்தவரும் இவர், சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றுவதுடன், பல நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கியும் சிறப்பித்துள்ளார். மேலும் பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி தமது ஆற்றலை வெளிப்படுத்திப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுமுள்ளார். சிறந்த மேடைப் பேச்சாளராக மட்டுமன்றி இலக்கிய எழுத்தாளராகவும் தம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்நிறுத்தியுள்ளார். சங்க இலக்கியங்கள் மேல் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக தாம் நயந்த சங்கக் கவிதைகள் பற்றித் தொடர்ந்து ஒவ்வொரு கிழமையும் வீரகேசரி - சங்கமம் பகுதியில் கட்டுரைகளை இரண்டு ஆண்டுகள் வரை எழுதி வந்துள்ளார். மேலும் சுதந்திரன், சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும் தமது படைப்புகளை வெளியிட்டு வந்ததுள்ளார்.

கலை ஆர்வம் கொண்டவராகிய இவர் நாடகங்களில் நடித்ததுடன், நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாகிய "வில்லுப்பாட்டு" நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு தமது ஆற்றலை வெளிக் காட்டியுள்ளார். மேலும் தேசிய கலைக்கழக இலக்கியக்குழுவில் அங்கம் வகித்துமுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகம் நடத்திவரும் ஊடகவியலாளர் டிப்ளோமா பாடநெறிக்கு வருகை தரு விரிவுரையாளராகவும், செயலூக்கக் குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். அகில இலங்கை சமாதான நீதவானாக இருக்கும் இவர் இலங்கைக் கலாசார அமைச்சின் "கலாபூஷணம்" விருதினையும் பெற்றுள்ளார். தற்பொழுது யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தின் தலைவியாக இருந்து கொண்டு பொதுப் பணிகளில் ஈடுபாடுகொண்டு உழைத்து வருகின்றார்.

06-03-1937 இல் பிறந்த செல்வி சற்சொரூபவதிநாதன் தமது 75 வயதைப் பூர்த்தி செய்திருக்கின்ற இவ்வேளையில், அவருடைய பல்துறைச் சாதனைகளையும், ஆற்றல்களையும், அவர் ஆற்றிய பணிகளையும் கருத்தில் கொண்டு கொழும்புத் தமிழ்ச்சங்கம் சங்கச் சான்றோர் விருது வழங்கிக் கௌரவிப்பது சிறப்பாகும்.

– தம்பு சிவசுப்பிரமணியம் –



# சங்கச் சான்றோர் விருது பெறும்

## திரு.சோமசுந்தரம் பரமசாமி

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் பரமசாமி அவர்கள் வீரசைவர் பரம்பரையில் உதித்தவர். 07-07-1931 இல் பிறந்த இவர், தமது ஆரம்ப கல்வியை இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் பயின்றார். அங்கு சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை (S.S.C)வரை படித்து சித்தியடைந்தபின் மேற்படிப்புக்காக தமிழகம் சென்றார். மற்றாஸ் பச்சையப்பன் கல்லூரியில் இணைந்து முன்னிலை வகுப்பில் தேறி, மற்றாஸ் மாநிலக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானமாணி (B.Sc) பட்டத்தைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பினார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் பட்டதாரி மொழிபெயர்ப்பாளராக அரசசேவையில் இணைந்து கொண்டார். முதலில் கணக்காய்வாளர் திணைக்களத்தில் பதவிபெற்ற இவர் 1968 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமையாற்றி 1992 இல் ஓய்வுபெற்றார்.

தமிழ்வேள் இ.க.கந்தசுவாமி அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இணைந்து பணிகளாற்றிக் கொண்டிருந்த காலப்பகுதியில் அவருடன் வந்திருந்து அவரின் பணிகளுக்கெல்லாம் உறுதுணையாகச் செயற்பட்டு வந்துள்ளார். 1979 ஆம் ஆண்டு தமிழ்ச் சங்க உறுப்பினராக இணைந்து கொண்ட இவர் இன்றும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக இருந்து வருகின்றார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் உதவிச் செயலாளராகவும், இலக்கியச் செயலாளராகவும் இருந்து சங்க வளர்ச்சிக்குத் தன்னாலான சேவையைச் செய்துள்ளார். மேலும் தமிழ்ச்சங்கம் நடத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புகளுக்கெல்லாம் இலவசமாகப் போதனைகள் வழங்கிய ஆசானாகவும் செயற்பட்டுள்ளார்.

அரசாங்க பணியிலிருந்து ஓய்வு பெற்ற இவர் இலக்கியப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். "வீரசைவர் மரபியல்", "வள்ளுவர் வாய்மொழி", "சமய நோக்கில் தமிழ் இலக்கியச் சிந்தனைகள்" ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய "வள்ளுவர் வாய்மொழி" என்னும் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலேயே வெளியிட்டு வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பணியிலும், சமயப்பணியிலும் தம்மை இணைத்துக் கொண்ட இவர், கொழும்பு விவேகானந்தா சபையின் துணைச் செயலாளராகவும் இருந்து பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்தும், கிளிநொச்சியிலிருந்தும் ஆன்மீகப் பணியாற்றிவந்த வடிவேல் சுவாமியாரை தமது குருவாக ஏற்று வாழ்ந்த இவர் அவர் மறைவிக்குப் பின் அவர் நினைவாக "வடிவேல் சுவாமி மலர்" என்னும் தொகுப்பின் ஆசிரியராக இருந்து ஒரு வரலாற்றுப் பொக்கிஷத்தையே சைவ உலகிற்கு வழங்கியுள்ளார். அத்துடன் "கைதடி வீரகத்தி விநாயகர் வரலாறு" என்னும் நூலையும் இவர் ஆக்கித் தந்துள்ளார்.

மேலும் இணுவில் "அறிவாலயம்", "பொதுநூலகம்" ஆகியவற்றின் வளர்ச்சிக்காக நூல்கள் பலவற்றை அன்பளிப்பாகவும் வழங்கியுள்ளார். இத்தகைய ஒரு பெருமகனாருக்கு கொழும்புத் தமிழ்சங்கம் "சங்கச் சான்றோர்" விருது வழங்கிக் கௌரவிப்பது பெருமைக்குரியது.

**– தம்பு சிவசுப்பிரமணியம்–**



## சங்கச் சான்றோர் விருது பெறும்

### திரு.சிவராசசிங்கம் கந்தசாமி

யாழ்ப்பாணம் - வடமராச்சி, தெற்குத் துன்னாலையைச் சேர்ந்த சிவராசசிங்கம் - மீனாட்சி தம்பதியினரின் மகனாக 1951 ல் பிறந்த கந்தசாமி அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை துன்னாலை ஆரம்ப பாடசாலையில் பயின்றார். அதன் பின் ஞானாசாரியாக் கல்லூரியிலும், கரவெட்டி திருவிருதயக் கல்லூரியிலும் கற்றார். இவர் தமது பேரனாகிய துன்னாலைப் பண்டிதர் தில்லைநாதர் அவர்களுடன் கொண்டிருந்த உறவின் காரணமாக தமிழ்மொழியின்பால் மிகுந்த பற்றுதலைக் கொண்டிருந்தார்.

அரச சேவையில் தபால் அதிபராக இணைந்து கொண்டு கொழும்பில் பணியாற்றிவந்த இவருக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடனான ஈடுபாடு ஏற்பட்டது. 1980 இல் தமிழ்ச் சங்க உறுப்பினராக இணைந்து கொண்டு, அதன் முன்னேற்றகரமான பணிகளுக்குத் தன்னாலான சேவையினை செய்து வந்தார். அக்காலத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரான கலாநிதி கே.எஸ்.நடராசா, மற்றும் திரு.இ. இரத்தினம், வித்துவான் சோதிநாதன், பண்டிதர் மு.கணபதிப்பிள்ளை, நீதியரசர் எச்.டபிள்யூ.தம்பையா, திரு.இலட்சுமணஐயர், வானொலிமாமா ச.சரவணமுத்து, திரு.எஸ்.செந்தில்நாதன், திரு.சபா ஜெயராசா, திரு.க.நவசோதி, தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி ஆகிய கல்விமான்களைச் சந்தித்து அவர்களுடனான நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும், குழுச் செயலாளராகவும் இருந்து பல பணிகளை முன்னெடுத்து வந்துள்ளார். இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தை முச்சங்கத்தின் வழிவந்த சங்கமாகவும், இதை தமிழ்ப் பேசும் அனைவருக்கும் உரித்தாக்குவதற்காகப் பாடுபட்டு வருகின்றார். அதனால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலும் பலர் ஆர்வம் கொண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சேருவதற்காக தமது விண்ணப்பங்களை கையளித்துள்ளார்கள்.

இவர் கொழும்பு தெற்கு சைவமுன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும், திருக்கேதீச்சர திருப்பணிச்சபை ஆட்சிக்குழு உறுப்பினராகவும், அகில இலங்கை இந்துமாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினராகவும் இருந்து சமய, சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றார்.

தற்பொழுது கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து கொண்டு, தலைமைப்பீடத்துடன் விசுவாசமாக உழைத்து வருகின்றார். அவருடைய பணியைப் பாராட்டி கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கச் சான்றோர் விருது வழங்கிக் கௌரவிக்கின்றது.

– தம்பு சிவசுப்பிரமணியம் –

**நன்றிக்குரியவர்கள்:**

பேராசிரியர் சபா ஜெயராசா

வவுனியூர் இரா உதயணன்

சதபூ பத்மசீலன்

அந்தனி ஜீவா

கலைஞர் கலைச்செல்வன்

தெ.மதுசூதனன்

த.கோபாலகிருஸ்ணன்

கே.பொன்னுத்துரை

சி.அமிர்தலிங்கம்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Printed By : Global graphics**
*#14, 57th Lane, Colombo 06. Tel : 2360678*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org